**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.54/2021**
**Prosecution Witnesses :8**

| | | | |
|---|---|---|---|
| Name | : வீரபாண்டி | Caste | : |
| Father 's Name / Husband Name | : குழந்தைவேல் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(27.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.05.2022 அன்று பணி நிறைவு பெற்று பணி ஓய்வில் இருந்து வருகிறேன். கடந்த 05.12.2019ம் தேதி கூடக்கோவில் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மேற்படி அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மதுரை மாவட்டம் திருமால் கிராமத்தை சார்ந்த சக்திவேல் மனைவி அழகம்மாள் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று 18.00 மணிக்கு காவல் நிலையம் வந்து கூடக்கோவில் காவல் நிலைய குற்ற எண். 158/2019 ச/பி. 294(பி), 323 இதச உ/இ 4 TNPHW Actன் படி வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை தனது புலன்

விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 19.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பொன்னன் த/பெ.கருப்பையா மற்றும் முருகேசன் த/பெ. தர்மலிங்கம் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.6, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சாட்சிகளை விசாரணை செய்ததில் வாதியானவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது கொடுத்த புகார் வாக்குமூலத்தில் விறகு கம்பு என்றும் பின்பு விசாரணையில் கம்பி என்று கூறியதால் இவ்வழக்கை 294(பி), 324 இதச மற்றும் 4 TNPHW Actன் படி வழக்கின் சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **அந்த சட்டமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும்**, பின்பு 09.12.2019ம் தேதி 14.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரியான ஆண்டி மகன் ஆண்டி என்பவரை திருமால் கிராமம் சாவடி அருகே வைத்து கைது செய்து 15.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து தக்க ஜாமினில் விடுவித்தேன். அதன் பிறகு 10.03.2020ம்தேதி இவ்வழக்கின் வாதிக்கு சிகிச்சை செய்த மருத்துவ அதிகாரியிடம் காயச்சான்று பெற்று மருத்துவ அதிகாரியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 324 இதச மற்றும் 4 TNPHW Actன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் கு.வி:**

இவ்வழக்கின் புகார்தாரர் காவல் நிலையம் நேரில் சென்று புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவரிடம் வாக்குமூலமாக பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த வாக்குமூலத்தில் விறகு கம்பால் அடித்தார்கள் என்றால் சரிதான். புகார்தாரருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்றிதழ் கொடுத்தார் என்றால் சரிதான்.

ஆனால் எனது விசாரணையில் வாதிக்கு ஏற்பட்ட காயம் கம்பியால் அடித்து ஏற்பட்ட காயம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி தாக்கியதாக கூறப்படும் விறகையோ, கம்பியையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார்தாரரும் எதிரியும் உடன்பிறந்த சகோதர சகோதரிகள் என்றால் சரிதான். புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் அவர் வீட்டின் முன்பு உள்ள கற்குவியலில் விழுந்து ஏற்பட்ட காயம் என்றாலும் எதிரி எவ்வித தாக்குதலையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரும் எதிரியும் உடன்பிறந்த சகோதர சகோரிகள் என்பதால் அவர்களுக்குள் எவ்வித வன்கொடுமையும் ஏற்பட வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை நேரில் சென்று சரிவர விசாரிக்காமலும் தயாரிக்கப்பட்ட குற்ற இறுதியறிக்கை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.